RNI-N0: TNTAM/2021/83936





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 129 | மே.15, 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5




## சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இதுவரை 1.38 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன

### உதயநிதி ஸ்டாலின் தகவல்

சென்னை: மே.15-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இதுவரை 1.38 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். சென்னை, திருவெற்றியூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று 1,500 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

பின்னர் அவர் பேசியதாவது: சென்னையில் பல ஆண்டுகளாக பட்டா இல்லாமல் இருக்கும் மக்களுக்கு பட்டா கொடுக்கப்படும் என்று கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது முதல்வர் வாக்குறுதி கொடுத்தார். அதற்காக வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழுவையும் நியமித்தார். அந்தக் குழு பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்தி பட்டா கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது.

அதன் அடிப்படையில், கடந்த ஜூலை மாதம் மாதவரத்தில் 2,200 பேருக்கு பட்டாக்களை வழங்கினோம். அடுத்து சோழிங்கநல்லூர் தொகுதியில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு பட்டா கொடுத்தோம். திருவொற்றியூர் தொகுதியிலும் கடந்த செப்டம்பர் மாதம் 2,120 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினோம். சென்னையில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பட்டாக்களை வழங்கி இருக்கிறோம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இதுவரை 1,38 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு 1,500 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, வடசென்னை அனல்மின் நிலையத்துக்கு இடம் கொடுத்த 400 பேருக்கு மாற்று இடம் வழங்கப்பட்டதற்கான பட்டா பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்தது. அதை கேள்விப்பட்ட முதல்வர், உடனே அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். அதன்படி 35 வருடங்களுக்கு பிறகு அந்த 400 பேருக்கும் தற்போது பட்டா வழங்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை 1970, 1980களில் வழங்கப்பட்ட இந்த வீட்டுமனைகளுக்கு பல இடங்களில் பட்டா இல்லை. நிறைய தொழில்நுட்ப காரணங்கள் இருந்தன. அதை எல்லாம் சரிசெய்து, இந்த பட்டாவை வழங்கி இருக்கிறோம். இந்த பகுதி மக்களுக்காக, விரைவில் இன்னும் 18 ஆயிரம் பட்டாக்களை வழங்கவுள்ளோம் என்று துணை முதல்வர் தெரிவித்தார்.

## ரூ.587 கோடியில் கட்டப்பட்ட 5,180 வீடுகளை விரைவில் முதல்வர் திறக்கிறார்

### அமைச்சர் அன்பரசன் தகவல்

சென்னை: மே.15-

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 13 திட்டப் பகுதிகளில் ரூ.586.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5,180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறக்கப்பட உள்ளதாக அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.



குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கைலாசபுரம், மீனவர் குடியிருப்பு, செட்டித் தோட்டம் மற்றும் மீனாம்பாள் சிவராஜ் நகர் ஆகிய திட்டப் பகுதிகளின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 13 திட்டப் பகுதிகளில் ரூ.586.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் திறந்துவைக்க உள்ளார்.

இந்த குடியிருப்புகளில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மின் இணைப்பு, சாலை வசதிகள் என அனைத்தும் முடிக்கப்பட வேண்டும்; அவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். முதல்வர் திறந்து வைத்தவுடனே வீடுகளை மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்த பெரியோர்கள், உடல்நிலை பாதிக்கப்பட்டோருக்கு முதல் மற்றும் 2வது மாடிகளை ஒதுக்க வேண்டும்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வாரியத்தால் கட்டப்பட்டு பழுதடைந்த குடியிருப்புகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ், ரூ.152.57 கோடி மதிப்பில் 51 ஆயிரம் குடியிருப்புகளை புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை 30,387 குடியிருப்புகள் பழுதுபார்த்து, புனரமைப்பு செய்து, புதுப்பொலிவு பெற்றுள்ளன. 20,613 குடியிருப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டு 202526ல் ரூ.280 கோடி மதிப்பீட்டில் 137 திட்டப் பகுதிகளில் உள்ள 76,549 குடியிருப்புகளை பழுது நீக்கி, புனரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைவருக்கும் வீடு திட்டத்தில், 20142021 வரை ரூ.2,438 கோடி மதிப்பில் 27,668 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டன. ஆனால், 4 ஆண்டு திமுக ஆட்சியில் ரூ.5,343.16 கோடி மதிப்பில். 46,929 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, இணை மேலாண்மை இயக்குநர் க.விஜயகார்த்திகேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சிட்டிங் எம்எல்ஏக்களில் பாதிப் பேருக்கு சீட் இருக்காது! அதிரடி ஆக்ஷன் பிளானுக்கு தயாராகும் ஸ்டாலின்

சென்னை, மே.15-

"வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில், வேட்பாளர்கள் யார் என்பதை தலைமை முடிவு செய்யும். வெற்றி பெறுபவர்களே வேட்பாளராக நிறுத்தப்படுவர். தகுதியானவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும். நிறுத்தப்படும் வேட்பாளர் வெற்றி பெற உழைக்க வேண்டியது உங்கள் (மாவட்டச் செயலாளர்கள்) கடமை" அண்மையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஸ்டாலின் தேர்தலுக்கான தனது ஆக்ஷன் பிளானை இப்படி அறிவித்தார்.



அதிமுக பாஜக கூட்டணி, தவெகவின் எழுச்சி இவற்றோடு அமலாக்கத்துறை, நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளால் ஆளுங்கட்சிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அந்த நெருக்கடிகளை சமாளித்து தேர்தலில் வென்று ஆட்சியைத் தக்கவைக்க ஆயத்தமாகி வருகிறது திமுக தலைமை.

தேர்தலுக்கான ஸ்டாலினின் ஆக்ஷன் பிளான் குறித்து பேசிய தலைமைக் கழக நிர்வாகிகள் சிலர், "உளவுத்துறை கொடுக்கும் சர்வேயும் சபரீசனின் 'பென்டீம்' தரும் சர்வே ரிப்போர்ட்டும் உடனுக்குடன் ஸ்டாலினின் தனிப்பட்ட பார்வைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதை கிராஸ் செக் செய்வதற்காக சில தனியார் ஏஜென்சிகள் மூலமும் சர்வே எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கோவையில் தொடங்கி கிருஷ்ணகிரி வரையிலான கொங்கு மண்டலத்தில் உள்ள 64 தொகுதிகளில், 2021 தேர்தலில், அதிமுக பாஜக கூட்டணி 42 தொகுதிகளை வென்றது. 22 தொகுதிகளில் மட்டுமே திமுக கூட்டணி வென்றது. கொங்கு மண்டலத்தில் கடந்த முறை கைவிட்டுப் போன 42 தொகுதிகளில் பெருவாரியான தொகுதிகளை இம்முறை திமுக கைப்பற்ற வேண்டும் என நினைக்கிறார் ஸ்டாலின்.

அதேபோல், வட தமிழகத்தில் உள்ள 65 தொகுதிகளில் கடந்த முறை 55 தொகுதிகளை திமுக கூட்டணி வென்றது. ஆனாலும் பல தொகுதிகளில் குறைவான வாக்கு வித்தியாசத்தில் தான் இந்த வெற்றி சாத்தியமானது. தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை, 20 தொகுதிகளில் கடும் போட்டி வரலாம் என சர்வே சொல்கிறது. திமுகவுக்கு பலவீனமாக உள்ள தொகுதிகளில் தனித்த செல்வாக்கு கொண்டவர்களை வேட்பாளர்களை நிறுத்தி கடுமையாக வேலை செய்தால் தான் அந்தத் தொகுதிகளை வென்றெடுக்க முடியும் எனவும் சர்வே கணித்திருக்கிறது.

மாநிலம் முழுவதும் முதல்வரின் செயல்பாடுகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தாலும் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல்பாட்டில் பல இடங்களில் அதிருப்தி இருக்கிறது. இது தேர்தலில் எதிரொலிக்கலாம் என்றும் சர்வே டீம் சொல்லியிருப்பதாக தெரிகிறது.

இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் கட்சிக்குள்ளும் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகி வருகிறார் ஸ்டாலின். அவரது இந்த நடவடிக்கையில், செயல்படாத நிர்வாகிகளும், அதிருப்திக்கு ஆளாகி இருப்பவர்களும் ஓரங்கட்டப்படுவார்கள். மாவட்டச் செயலாளர்களின் சிபாரிசுப்படி தேர்தலில் சீட் கொடுத்து வந்த முறையையும் இம்முறை மாற்றப் போகிறார் ஸ்டாலின். அதையும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்.

அதேசமயம், தொகுதிக்கு 3 பேர் கொண்ட பட்டியலை தயாரிக்கும் பொறுப்பையும் 'பென்டீம்' பொறுப்பில் விட்டிருப்பதாகத் தெரிகிறது. தகுதியான வேட்பாளர்கள் என்ற அளவுகோல் எடுக்கப்பட்டிருப்பதால் சிட்டிங் எம்எல்ஏக்களில் பாதிப் பேருக்கு மேல் மீண்டும் சீட் கிடைக்க வாய்ப்பில்லை. சாதிய பின்னணி, பணபலம், நற்பெயர், தொகுதியில் தனித்த செல்வாக்கு உள்ளிட்ட தகுதிகளுடன் இம்முறை வேட்பாளர்களைத் தேடுகிறது திமுக. இதனால், கட்சி சாராத, கட்சியில் முக்கிய பதவியில் இல்லாதவர்களுக்கும் கூட இம்முறை வாய்ப்புக் கிடைக்கலாம்" என்றனர்.

ஆட்சியை தக்க வைக்க முதல்வர் ஸ்டாலினின் 2.0 இலக்கை நோக்கிய இந்த அதிரடி ஆக்ஷன் பிளான் கட்சிக்குள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரியவில்லை!

## மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு குரூப் 4 தேர்வு இலவச பயிற்சி

### மாவட்ட ஆட்சியர் தகவல்

சென்னை: மே.15-

குரூப் 4 தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு சென்னையில் இலவச பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

அனைத்துவகை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) மூலம் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கான ஒருங்கிணைந்த குரூப் 4 தேர்வு நடத்தப்பட உள்ளது.

இதையொட்டி தேர்வெழுதும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் சென்னை கிண்டியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது.

இந்த பயிற்சியானது வார நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 10 முதல் மதியம் 1 மணி வரை நடத்தப்படுகிறது. தேர்வுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 10ம் வகுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பயிற்சி வகுப்பில் சேர விருப்பமுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பப்படிவ நகல், ஆதார் அட்டை நகல், புகைப்படம் ஆகியவற்றுடன் சென்னை கிண்டியில் செயல்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை அணுகலாம்.

சென்னை மாவட்டத்தை சேர்ந்த தகுதிவாய்ந்த மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே அறிவுறுத்தியுள்ளார்.

## ஒரே இரவில் 350 ட்ரோன்கள்... பாகிஸ்தான் வீரர்களுக்கு பயிற்சி

புதுடில்லி: மே.15-

இந்தியாவுக்கு எதிரான போரின் போது, பாகிஸ்தானுக்கு 350 ட்ரோன்களையும், அதனை இயக்குவதற்கு ஆபரேட்டர்களையும் துருக்கி வழங்கியதாக புது தகவல் கிடைத்துள்ளது. இதன்மூலம், இந்தியா மீது ட்ரோன் தாக்குதல் நடத்த துருக்கி உதவி செய்திருப்பது அம்பலமாகியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான், துருக்கி நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்புத்துறை ரீதியான உறவுகள் அதிக வளர்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தான் ராணுவ உபகரணங்கள் வழங்குவது மட்டுமல்லாமல், அந்நாட்டு ராணுவ வீரர்களுக்கு போர் பயிற்சியையும் துருக்கி வழங்கி வருகிறது.

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் துருக்கி நாட்டைச் சேர்ந்த ட்ரோன் ஆபரேட்டர்கள் 2 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## ஸ்டாலின் 4 ஆண்டுகளாக நடத்துவதை 'ஆட்சி' என்று கூறுவதுதான் ஆகப்பெரிய 'ஹம்பக்' இபிஎஸ்

சென்னை: மே.15-

"பொள்ளாச்சி வழக்கில், கைது செய்ததும், சிபிஐக்கு மாற்றியதும் அதிமுக அரசு. விசாரித்தது சிபிஐ, தீர்ப்பு வழங்கியது நீதிமன்றம். இதில் மாநில திமுக அரசுக்கோ, ஸ்டாலினுக்கோ என்ன பங்கு இருக்கிறது? ஏன் கூச்சமே இல்லாமல் மார்தட்டுகிறார் மு.க.ஸ்டாலின். இவர் கையில் பொள்ளாச்சி வழக்கு இருந்திருந்தால் எந்த லட்சணத்தில் நடத்தியிருப்பார் என்பதற்கு அண்ணா பல்கலை. மாணவி வழக்கும், அண்ணா நகர் சிறுமி பாலியல் வழக்குமே சாட்சி" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதல்வர் ஸ்டாலினுக்கு பதிலளித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப்பக்கத்தில், "இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின், தனது ஊட்டி போட்டோஷூட்டுக்கு இடையே ஒரு பேட்டி கொடுத்துள்ளார். பொள்ளாச்சி வழக்கில், கைது செய்ததும், சிபிஐக்கு மாற்றியதும் அதிமுக அரசு. விசாரித்தது சிபிஐ, தீர்ப்பு வழங்கியது நீதிமன்றம். இதில் மாநில திமுக அரசுக்கோ, ஸ்டாலினுக்கோ என்ன பங்கு இருக்கிறது? ஏன் கூச்சமே இல்லாமல் மார்தட்டுகிறார் மு.க.ஸ்டாலின். இவர் கையில் பொள்ளாச்சி வழக்கு இருந்திருந்தால் எந்த லட்சணத்தில் நடத்தியிருப்பார் என்பதற்கு அண்ணா பல்கலை. மாணவி வழக்கும், அண்ணா நகர் சிறுமி பாலியல் வழக்குமே சாட்சி.

கோடநாடு வழக்கில் வழக்கு பதிந்ததும், குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது அதிமுக அரசு. கொடும் குற்றம் புரிந்த கேரளாவைச் சேர்ந்த குற்றவாளிகளுக்காக வாதாடியவர் திமுகவைச் சார்ந்த வழக்கறிஞர். ஜாமீன்தாரர் திமுகவை சார்ந்தவர். வெளிமாநில குற்றவாளிகளுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு? தான் ஆளுங்கட்சி என்பதையே மறந்துவிட்டு, இன்னும் தன்னை எதிர்க்கட்சித் தலைவராகவே நினைத்துக் கொண்டிருக்கிறாரா?

இதையெல்லாம் பார்க்கும் போது, உங்களுக்கு மறதி அதிகமாக இருக்கிறது என்று மக்கள் பேசுவது உண்மை தானோ? என்று கேட்கத் தோன்றுகிறது. அதிமுக வலியுறுத்தலையடுத்து, மத்திய அரசு தமிழகத்துக்கான 100 நாள் வேலைத் திட்டம், சென்னை மெட்ரோ 2ம் கட்டம் ஆகியவற்றிற்கான நிதியை விடுவித்தது என்பதை Humbug, பித்தலாட்டம் என்று புலம்புகிறார். முதல்வர் ஸ்டாலின் நான்கு ஆண்டுகளாக நீங்கள் நடத்துவதற்கு பெயர் 'ஆட்சி' என்று சொல்வது தான் ஆகப்பெரிய ஹம்பக்.

ஆட்சியில் இருந்தபோதும் சரி, இல்லாத போதும் சரி, நதிநீர் உரிமை முதல் நிதி உரிமை வரை தமிழகத்துக்கான அனைத்தையும் பெற்றுத் தந்திருக்கின்ற இயக்கம் அதிமுக. நான் எப்போது மத்திய அமைச்சர்களை சந்தித்தாலும், மாநில நலன் குறித்து பேசுவேன். நிதிகளைக் கேட்டுப் பெறுவேன், அது என்னுடைய மாநில உணர்வு.மறந்திருந்தால், டெல்லி விமான நிலையத்தில் நான் அளித்த பேட்டியைப் பாருங்கள். இருமொழிக் கொள்கை முதல் கோதாவரி காவிரி இணைப்பு திட்டம் வரை பல்வேறு மாநிலக் கோரிக்கைகளை நான் பேசியிருக்கிறேன்.

நீங்கள் கூறி தான் பேசுகிறோம் என்றெல்லாம் மாயக் கோட்டை கட்டவேண்டாம். இத்தனை நாட்கள் 'என்னால் நிதியைக் கேட்டுப் பெற முடியுமா?' என்று கேலி பேசியவர், நிதியைப் பெற்றுத் தந்ததும் அதனை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். இதுதானே ஒரிஜினல் பித்தலாட்டம்? மாநிலத்தில் ஆட்சி, மத்தியில் 39 எம்.பி.க்கள் வைத்தும் தன்னால் சாதிக்க முடியாததை, அதிமுக செய்துவிட்டதே என்ற வயிற்றெரிச்சல் முதல்வருக்கு இருக்கிறது போலும். மக்களுக்கும், மாநிலத்துக்கும் நன்மை நடப்பதைக் கூட ஏற்க முடியாத உங்களை, 2026ல் நிச்சயம் மக்கள் ஏற்கப்போவது இல்லை" என்று அவர் கூறியுள்ளார்.





## சித்திரை திருவிழா நிறைவு நிலாச்சோறுவுடன் நடைபெற்ற பட்டிமன்றம்

மானாமதுரை மே.15

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வீர அழகர் கோயிலில் சித்திரைத்திருவிழா மே 8 கொடியேற்றத்துடன் துவங்கியது. முக்கிய நிகழ்ச்சியான வைகை ஆற்றில் அழகர் இறங்கும் விழா மே 12ல் நடைபெற்றது

நேற்று இரவு நிலாச்சோறு நிகழ்ச்சியை முன்னிட்டு மானாமதுரை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த அனைத்து மதங்களை சேர்ந்தவர்கள் சைவம் மற்றும் அசைவ உணவுகளை சமைத்து கொண்டு வந்து வைகை ஆற்றில் வைத்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக ஏராளமான முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் வீடுகளில் சமைத்த உணவுகளை வைகை ஆற்றுக்குள் கொண்டு வந்து உறவினர்களுடன் அமர்ந்து மற்ற குடும்பத்தினருக்கும் பகிர்ந்து கொண்டனர்.அதே போல் ரயில்வே காலனி சேவைக்கரங்கள் பிரண்ட்ஸ் கிளப் சார்பில் 34 ஆண்டு அன்னதானம் விழா வீர அழகர் இறங்கும் வைபவம் அன்று பக்தர்களுக்கு வழங்கினர். அதைத் தொடர்ந்து மானாமதுரை சந்திப்பு நிலையம் எதிரே மகிழ்ச்சியான வாழ்க்கை திருமண வாழ்க்கை பின்னரா? முன்னரா? என்ற நகைச்சுவை பட்டிமன்றம் மானாமதுரை ரயில்வே நிலைய அதிகாரி குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சன் டிவி புகழ் நடுவர் சொல்லின் செல்வி, திருமணத்திற்கு முன்பே என்ற தலைப்பில் திருநாவுக்கரசர், டேக்கியோ ராமநாதன் உரையாற்றினர். திருமணத்திற்கு பின்பே என்ற தலைப்பில் சத்யா மோகன், சிவசங்கரி கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகிழ்ச்சியான வாழ்க்கை திருமணத்திற்கு பின்பே என நிகழ்ச்சி நிறைவு பெற்றது ரயில்வே காலனி மற்றும் சுற்று வட்டார பகுதி மக்கள் தங்கள் இல்லங்களில் சமைத்த உணவுகளை பட்டிமன்றம் பார்த்துக் கொண்டே சிலர் ரயில்வே மைதானத்தில் நிலாச்சோறு சாப்பிட்டனர். பட்டிமன்றம் முடிந்தவுடன் சேவை கரங்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து நிலாச்சோறு சாப்பிட்டார்கள்.



■ திருவண்ணாமலை மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எம்.சுதாகர், தலைமையில் பொதுமக்கள் குறைத்தீர்வு சிறப்பு மனு விசாரணை முகாம் நடைபெற்றது.

## கொளுத்தும் வெயிலில் இருந்து எஸ்கேப் ஆக தடுப்பணைகளில் குவிந்த மக்கள்



தேனி, மே.15-

கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பிக்க சின்ன மனூர் அருகே முல்லைப் பெரியாற்றுக்குள் மார்க்கையன்கோட்டை மெகா தடுப்பணையில் பொதுமக்கள் குளித்து மகிழ்ந்து வருகின்றனர். தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுக்கும் மற்ற பிற விவசாயிகளுக்கும் அனைத்து வகையான விவசாய சாகுபடிகளுக்கு முக்கிய பாசன ஆதாரமாக முல்லை பெரியாறு அணை நீர் விளங்கி வருகிறது. அதன்படி கம்பம் பள்ளத்தாக்கு 15 ஆயிரம் ஏக்கர் இரு போகம் நெல் சாகுபடி விவசாயத்திற்கும் மற்றும் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பிற விவசாயமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் நெல் சாகுபடி ஆன இரு போகங்கள் நிறைவு செய்த பின்னர் முல்லைப் பெரியாற்றில் முன்னதாகவே திறந்து விடப்பட்ட தண்ணீர் அடைக் கப்பட்டது.

இதனால் லோயர் கேம்பில் துவங்கி கூடலூர், வெட்டுக்காடு, கே.ஜி பட்டி, என்.டி.பட்டி, சுருளிப்பட்டி, கம்பம், ராயப்பன்பட்டி கோகிலாபுரம், உத்தமபாளையம், மார்க்கையன்கோட்டை, சீலையம்பட்டி, சின்னமனூர், கோட்டூர், வீரபாண்டி, பிசிபட்டி வரையில் இடையே ஆங்காங்கே இருக்கின்ற மெகா தடுப்பணைகள் தண்ணீர் வரத்து இருந்த நிலையில் படிப்படியாக குறைந்து வறண்ட நிலையை எட்டியது. இந்நிலையில் கடந்த 6ம் தேதி தேனி அருகே உள்ள வீரபாண்டி கவுமாரியம்மன் கோயில் 8 நாள் சித்திரைப் பெருந்திருவிழாவிற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. அதனால் கடந்த மூன்று வாரத்திற்கு மேலாக முல்லைப் பெரியாற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் தடுப்பணைகளை கடந்து ஆற்றில் சென்று வருகிறது.

கோடை வெயில் கொளுத்தி வரும் நிலையில் நண்பகல் 11 மணியிலிருந்து மாலை 3 மணி வரை பொதுமக்கள் வெளியில் வர வேண்டாம் என்று எச்சரிக்கை செய்துள்ளனர். இருந்த போதிலும் வேலை தாங்க முடியாத நிலையில் பொதுமக்கள் பலரும் ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் என நீர்நிலைப் பகுதிகளை தேடி அங்கு சென்று தண்ணீரில் குளித்து மகிழ்ந்து வீடு திரும்பும் நிலை நீடித்து வருகிறது. இதனால் சின்னமனூர் அருகே எல்லப்பட்டி முல்லைப் பெரியாற்றுக்குள் இருக்கும் மார்க்கையன் கோட்டை நீண்ட மெகா தடுப்பணைக்கும், சின்னமனூர் அருகே மேல பூலானந்தபுரம் முல்லைப் பெரியாற்று சீலையம்பட்டி தடுப்பணைக்குள்ளும், ஆண்கள் பெண்கள் பொதுமக்கள் என கூட்டம் கூட்டமாக வருகின்றனர். அதேபோல் மேகமலை ,ஹைவேவி ஸ்,குமுளி தேக்கடி போன்ற பகுதிகளுக்கு சுற்றுலா செல்கின்றவர்கள் மேற்படி இந்த இரண்டு தடுப்பணை களுக்குள்ளும் சென்று ரசித்து விட்டு கடந்து வருகின்றனர்.

வீரபாண்டியிலும் குவிந்தனர்;

தேனி அருகே உள்ள பிரசித்தி பெற்ற வீரபாண்டி கவுமாரியம்மன் கோயிலை ஒட்டி முல்லையாறு செல்கிறது. இங்கு தடுப்பணை இருப்பதால் கோயிலுக்கு வரும் பக்தர்கள், பயணிகள் ஆற்றில் குளித்துச் செல்ல விரும்புவார்கள். தற்போது கோடை விடுமுறை என்பதாலும் தண்ணீர் வரத்து இருப்பதாலும் ஏராளமானோர் இங்கு வந்து குளித்துச் செல்கின்றனர். கடந்த மே 6ம் தேதி முதல் நேற்று வரை வீரபாண்டி கவுமாரியம்மன் கோயில் சித்திரை திருவிழா நடைபெற்றது. விழா நாட்களில் பக்தர்கள் கூட்டம் களைகட்டியது. திருவிழாவுக்கு வந்தவர்களில் பல்லாயிரக் கணக்கானோர் குறைந்த தண்ணீரிலும் ஆற்றில் குளித்து மகிழ்ந்தனர். இதையடுத்து கோடை மழை தொடங்கியதால் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் முல்லையாற்றில் குளிக்க வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்தது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக நீர்வரத்து குறைந்துள்ளது.

இருந்த போதும் இங்கு குளிக்க வருவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஏராளமான இளைஞர்கள், சிறுவர்கள், குடும்பத்தினர் மகிழ்ச்சியுடன் குளித்து செல்கின்றனர். சித்திரை திருவிழா காலத்தில் வர முடியாத பக்தர்கள் பலரும் தற்போது கோயிலுக்கு வந்து செல்கின்றனர். அவர்களும் முல்லையாற்றில் உற்சாகமாக குளித்து அம்மனை வழிபட்டு செல்கின்றனர். மேலும் தேனி பகுதியை கடந்து செல்லும் பயணிகளும் வீரபாண்டி வழியாக வந்து வாகனங்களை நிறுத்தி குளித்துச் செல்கின்றனர். இதனால் முல்லையாறு தடுப்பணை பகுதியில் கூட்டம் காணப்படுகிறது.

## வேலூர், மதுரையில் 106 டிகிரி வெயில் கொளுத்தியது

சென்னை, மே.15-

தமிழகத்தில் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக சில இடங்களில் மழை பெய்துள்ளது. குறிப்பாக கோவை, மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்துள்ளது. வெப்பநிலையை பொருத்தவரையில் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது.

சில இடங்களில் இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகமாகவும் இருந்தது.

ந.க.எண் ஆ1/10495/2022
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் சிவகங்கை
அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் பனங்காடி அஞ்சல் பேச்சாத்தகுடி கிராமத்தில் வசிக்கும் கண்ணன் என்பவரின் தாத்தா முத்து வயிறு த/பெ துரைப்பாண்டியன் என்பவர் கடந்த 05 /10 /1976 ம் தேதி காளையார் கோயில் வட்டம் பனங்காடி அஞ்சல் பேச்சாத்தகுடி கிராமத்தில் இறந்துவிட்டார் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை இந்த இறப்பினை பதிவு செய்ய கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளேன் மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக யாருக்கு எனும் ஆச்சரியப்பட இருந்தால் இந்த அறிவிப்பு செய்த 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரபெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிட்டு உள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரி உள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது

கண்ணன்
மனுதாரர்

## முத்துப்பேட்டை மார்க்கெட்டில் மருத்துவ குணம் கொண்ட ஒரு கத்தாழை மீன் ரூ.26 ஆயிரத்திற்கு விற்பனை



முத்துப்பேட்டை, மே.15-

முத்துப்பேட்டை மீன் மார்க்கெட்டில் மருத்துவ குணம் கொண்ட 4 கிலோ எடை கொண்ட ஒரு கத்தாழை மீன் ரூ.25 ஆயிரத்திற்கு போட்டி போட்டி ஏலம் எடுத்தனர். திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை கடல் சார்ந்த பகுதி என்பதால் இப்பகுதியில் உள்ள ஆசாத்நகர் மற்றும் பெரியக்கடை தெரு மீன் மார்க்கெட்களுக்கு பல்வேறு வகை மீன் வகைகள் விற்பனைக்கு குவிக்கப்பட்டு இருக்கும். இதில் குறிப்பாக இப்பகுதியில் உள்ள அலையாத்திகாடு வேர்களில் உற்பத்தியாகி வளரக்கூடிய மீன் வகைகள் அதிக ருசி கொண்டதாக இருக்கும்.

இதனால் அதிக அளவில் இப்பகுதியில் உற்பத்தியாகும் கொடுவா, கெண்டை மீன், வெள்ளாம் பொடி மீன், கத்தாழை போன்ற மீன்கள் இப்பகுதியில் உள்ள பெரியக்கடை தெரு மற்றும் ஆசாத்நகர் மீன் மார்கெட் பகுதியில் அதிக அளவில் விற்பனைக்கு காணப்படுவது வழக்கம். மற்ற வகை மீன்கள் அருகில் உள்ள நாகப்பட்டினம், கோடியக்கரை, மல்லிபட்டினம் போன்ற பகுதியில் இருந்து இங்கே விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது.

இந்நிலையில் முத்துப்பேட்டை அலையாத்திகாடுகள் நிறைந்த லகூன் பகுதியிலிருந்து சிலதினங்களாக மீனவர்களின் வலைகளில் சிக்கும் அதிக மருத்துவ குணம் கொண்ட கத்தாழை மீன்கள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. ஒருகிலோ கத்தாழை மீன் 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில் ஆண் கத்தாழை மீனில் மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படும் விலை உயர்ந்த நெட்டி இருக்கும் என்பதால் ஆண் மீன்களை மார்க்கெட்டுக்கு ஏலத்திற்கு கொண்டு வரும்போது வியாபாரிகள் அதிகளவில் போட்டிபோட்டுக்கொண்டு அதிக விலைக்கு ஏலம் எடுப்பார்கள். இதில் சென்ற ஆண்டு சுமார் 10 கிலோ எடைக்கொண்ட மூன்று கத்தாழை மீன்கள் ரூ.48,900க்கு விலைபோனது. இந்த வீடியோ காட்சி சமூக வலைத்தளத்தில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

அதனை மிஞ்சும் வகையில் நேற்று ஆசாத்நகர் மீன் மார்கெட்டுக்கு மீனவர் ஒருவர் வலையில் சிக்கிய சுமார் 4 கிலோ எடை கொண்ட ஒரு கத்தாழை மீனை கொண்டு வந்து ஏலத்திற்கு வைத்திருந்தார். அப்போது ஏலம் விடும் நபர் தொடக்கத்தில் 20 ஆயிரம் ரூபாயில் தொடங்கினார். அப்போது வியாபாரிகள் ஏலம் எடுக்க போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்டனர். இதில் கடைசியில் அந்த கத்தாழை மீன் ஒன்று ரூ.26 ஆயிரத்திற்கு விலைபோனது. இதனை மீன் வாங்க வந்த மக்கள் வேடிக்கையுடன் பார்த்தனர். இந்நிலையில் இந்த கத்தாழை மீன் ஏலம் விடும்போது அங்குள்ள நின்று வேடிக்கை பார்த்தவர்கள் எடுத்த வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வைரலாகி வருகிறது.



## மதுரை சித்திரை திருவிழா; விடிய, விடிய தசாவதாரத்தில் அருள்பாலித்த அழகர்: ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து பரவசம்

மதுரை, மே.15-

மதுரை சித்திரை திருவிழாவில் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம் என தசாவதாரங்களில் அழகர் அருள்பாலிக்கும் நிகழ்வு நேற்றிரவு முதல் இன்று காலை வரை விடிய, விடிய நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள், தரிசனம் செய்து பரவசமடைந்தனர். மதுரை மாவட்டம், அழகர்கோவில் சித்திரை திருவிழா கடந்த 8ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. 10ம் தேதி தங்கப்பல்லக்கில் அழகர், மதுரை புறப்பட்டு வந்தார். விழாவின் சிகர நிகழ்ச்சியான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடந்தது. பின்னர் மதுரை வண்டியூரில் உள்ள வீரராகவ பெருமாள் கோயிலுக்கு இரவு 11 மணியளவில் சென்றார். அங்கு நேற்று காலை அழகருக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டு பின் சைத்திரயோபசாரம் நடந்தது. பின்னர் ஏகாந்த சேவையில் எழுந்தருளிய அழகர், வீரராகவ பெருமாள் கோயிலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பின்னர் சேஷ வாகனத்தில் சுந்தர ராஜப்பெருமாள், திருக்கோலத்தில் புறப்பாடாகிய அழகர், வண்டியூர் பகுதி வைகையாற்றில் உள்ள தேனூர் மண்டகபடியில் எழுந்தருளினார். அங்கு நாரைக்கு முக்தி அளித்தலும், மண்டுக முனிவருக்கு சாபவி மோசனம் அளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து, தேனூர் மண்டகப்படியை வலம் வந்த அழகர், அங்கிருந்து புறப்பாடா கியபோது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கைகளில் சர்க்கரை தீபம் ஏந்தி சாமி தரிசனம் செய் தனர். மாலையில் அனுமார் கோயிலில் அழகர் எழுந்தருளினார். அங்கு அங்கப் பிரதட்சணம் நடை பெற்றது. பின் மேளதாளம் முழங்க மதுரை ஆழ்வார் புரத்தில் உள்ள ராமராயர் மண்டபத்துக்கு புறப்பட்டார். அந்த மண்டபத்தில் இரவு 10 மணிக்கு தொடங்கி விடிய, விடிய தசாவதாராம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், முத்தங்கி சேவை, மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், மோகினி அவதாரம் உள்ளிட்ட தசாவதாரங்களில் அழகர் பக்தர்களுக்கு காட்சி தந்தார். இன்று காலை 6 மணிக்கு மோகினி அவதாரத்தில் வீதியுலா வந்த அழகர், பகல் 12 மணிக்கு ராமராயர் மண்டபத்தில் ராஜாங்க கோலத்தில் எழுந்தருளினார். தொடர்ந்து நாளை அதிகாலை 2.30 மணிக்கு தல்லாகுளத்தில் உள்ள ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் திருமஞ்சனமாகி, கள்ளர் திருக்கோலத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். அதே திருக்கோலத்தில் கருப்பணசாமி கோயில் சன்னதியில் வையாழி ஆனவுடன் அங்கிருந்து அழகர் மலைக்கு புறப்படுகிறார். 16ம் தேதி அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியாக காலை 10 மணிக்கு மேல் இருப்பிடம் சென்றடைகிறார். 17ம் தேதி உற்சவ சாந்தியுடன் சித்திரை திருவிழா நிறைவு பெறுகிறது.






■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் "நான் முதலவன்" திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு 2025 திட்டத்தை தொடங்கி வைத்தார்கள் அதனை தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் லேடி டோக் பெருமாட்டி கல்லூரியில் "நான் முதலவன்" திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு 2025 மாணாக்கர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள சங்கீதா குத்துவிளக்கேற்றி மாணவ மாணவிகளுக்கு "கல்லூரி கனவு" குறித்த வழிகாட்டுதல் கையேட்டினை வழங்கி உரையாற்றினார்.



## கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் தாலி கட்டிக்கொண்டு ஆடிப்பாடிய திருநங்கைகள்

கள்ளக்குறிச்சி, மே.15-

கூவாகம் கூத்தாண்டவர் திருவிழாவில் ஏராளமான திருநங்கைகள் பூசாரி கரங்களால் தாலிக் கட்டிக் கொண்டு, இரவு முழுவதும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டையை அடுத்த கூவாகம் கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கூத்தாண்டவர் கோயிலில் சித்திரைத் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் 18 நாட்கள் விமரிசையாக நடைபெறும். இதில் பல்வேறு இடங்களில் இருந்து வரும் திருநங்கைகள் திரளாக கூத்தாண்டவரை மணவாளனாக ஏற்று, திருமணம் செய்துகொள்கின்றனர்.

அதன்படி, கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் சித்திரைத் திருவிழா ஏப். 19ம் தேதி தொடங்கியது. கூவாகத்தைச் சுற்றியுள்ள 8 கிராம மக்கள் கூழ் தயாரித்து கோயிலில் படையலிட்டு, பக்தர்களுக்கு வழங்கினர். தினமும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முக்கிய நிகழ்வான கூத்தாண்டவர் திருக்கண் திறத்தல் நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்க தமிழகம் மட்டுமின்றி, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் ஏராளமான திருநங்கைகள் கூவாகத்தில் நேற்று மதியம் முதலே குவியத் தொடங்கினர்.

திருநங்கைகள் பட்டுப்புடவை அணிந்து, மலர்கள் சூடி, மணப்பெண் கோலத்தில் கோயிலுக்கு வந்தனர். அவர்கள் மஞ்சள் நாணில் தாலி கோர்த்து கோயில் பூசாரியிடம் கொடுத்து, கூத்தாண்டவரை தன் கணவராகப் பாவித்து தாலி கட்டிக் கொண்டனர். பின்னர், கோயிலை விட்டு வெளியே வந்து கும்மியடித்து, ஆடிப்பாடி மகிழந்தனர்.

விழாவையொட்டி, குடிநீர், குளியலறை, கழிப்பறை, தங்குமிடங்கள் உள்ளிட்ட ஏற்பாடுகளை கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகம் செய்திருந்தது. சமூக நலத்துறை மூலம் பால்வினைத் தடுப்பு விழிப்புணர்வு அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. உளுந்தூர்பேட்டை விழுப்புரத்தில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன. கள்ளக்குறிச்சி எஸ்.பி. தலைமையில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கூத்தாண்டவரை மணம் முடிக்கும் நிகழ்வு நேற்று மாலை தொடங்கி இரவு வரையிலும் கோயில் வளாகத்தில் தொடர்ந்தது. இன்று சித்திரைத் தேரோட்டம், அரவான் களப்பலி காணும் நிகழ்வு, தொடர்ந்து தாலி அறுத்து திருநங்கைகள் அழுகளம் காணும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நாளை விடையாத்தி நிகழ்வு நடைபெறும். வரும் 16ம் தேதி தருமர் பட்டாபிஷேகத்துடன் 18 நாள் சித்திரைத் திருவிழா நிறைவு பெறுகிறது. ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், கிராம மக்கள் மற்றும் விழாக் குழுவினர் செய்துள்ளனர்.

## தொடர் முகூர்த்தம் எதிரொலி: திருப்புவனம் சந்தையில் ரூ.1 கோடி ஆடு விற்பனை

திருப்புவனம், மே.15-

தொடர் முகூர்த்த நாட்களால் திருப்புவனம் ஆட்டுச்சந்தையில், நேற்று ரூ.1 கோடிக்கு ஆடு, கோழி விற்பனை செய்யப்பட்டது. சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை ஆடு, கோழி சந்தை நடைபெறும். இந்த சந்தைக்கு மதுரை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட அருகேயுள்ள மாவட்டங்களில் இருந்தும், கேரளா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் வருவார்கள். இதுதவிர விவசாயிகள் தங்களது வீடுகளில் வளர்க்கவும் ஆடு, மாடு, கோழிகளை வாங்கிச் செல்வர்.

தென் மாவட்டங்களில் முகூர்த்த நாட்களில் நடைபெறும் காதணி விழா, வசந்த விழாக்களில் அசைவ உணவுக்கு முக்கிய இடமுண்டு. வரும் 15ம் தேதி வைகாசி மாதம் பிறக்கிறது. இதைதொடர்ந்து வரும் 16, 18 மற்றும் 19ம் தேதிகள் முகூர்த்த நாட்களாகும். இதையடுத்து திருப்புவனத்தில் நேற்று காலை நடைபெற்ற ஆடு, கோழி சந்தை களைகட்டியது. அதிகாலை முதலே வியாபாரிகள், பொதுமக்கள் ஏராளமானோர் குவிந்தனர். இவர்கள் ஆடு, கோழிகளை விவசாயிகளிடம் இருந்து போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். வழக்கமாக 10 கிலோ எடை கொண்ட ஆடு சந்தையில் ரூ.6 ஆயிரம் வரை விற்கப்படும். ஆனால் நேற்றைய சந்தையில் ரூ.8,500 வரை விற்கப்பட்டது. இருப்பினும் விலை உயர்வை பொருட்படுத்தாமல் வியாபாரிகள், பொதுமக்கள் ஆர்வமுடன் ஆடுகளை வாங்கிச் சென்றனர்.

இதேபோல நாட்டுகோழி விலை ரூ.200ல் இருந்து ரூ.300 ஆக உயர்ந்தது. இருப்பினும், செம்மறி ஆடுகள் வழக்கம்போல ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை விற்கப்பட்டது. நேற்று காலை 7 மணி வரை சுமார் ரூ.1 கோடிக்கு ஆடு, கோழி விற்பனை நடைபெற்றதாக கூறப்படுகிறது. ஆடுகளுக்கு நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## சித்ரா பவுர்ணமி திருவிழாவை முன்னிட்டு செண்பகாதேவி அம்மன் கோவிலில் மஞ்சள் நீராட்டு: திரளான பக்தர்கள் பங்கேற்பு



தென்காசி, மே.15-

குற்றாலம் மலை மீது அமைந்துள்ள செண்பகாதேவி அம்மன் கோவிலில் சித்ரா பவுர்ணமி திருவிழாவில் நேற்று அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு வைபவம் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். திருக்குற்றாலத்திற்கு இணையான அகஸ்தியர் அமர்ந்த பொதிகை மலையில் அமைந்துள்ள செண்பகாதேவி அம்மன் கோவிலில் சித்ரா பவுர்ணமி திருவிழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு திருவிழா கடந்த 3ம்தேதி காலையில் அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் துவங்கியது. விழாவில் தினமும் ஒவ்வொரு சமுதாய மண்டகப்படி சார்பில் சிறப்பு அபிஷேக. அலங்கார தீபாராதனையும் நடந்தது.

முக்கிய நிகழ்ச்சியான சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு நேற்று முன்தினம் அம்மனுக்கு காலையில் கணபதி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள், சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனைகள், இரவில் சிறப்பு அலங்கார தீபாராதனைகள், வில்லிசை, நள்ளிரவில் சித்ரா பௌர்ணமி சிறப்பு வழிபாடு நடந்தது. நேற்று தீர்த்தவாரியை முன்னிட்டு காலையில் மூலஸ்தானத்தில் உள்ள அம்மனுக்கு பல்வேறு நறுமணப் பொருட்களால் சிறப்பு அபிஷேகங்கள் நடந்தது. தொடர்ந்து. செண்பகாதேவி உற்சவர், அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பின்பு செண்பகாதேவி அருவிக்கரை அருகில் உள்ள தீர்த்தவாரி மண்டபத்தில் உள்ள அகஸ்தியர் பாதத்தில் வைத்து அபிஷேகங்கள் நடந்தது.

தொடர்ந்து செண்பகாதேவி அருவியில் வைத்து சந்தனம், பன்னீர், குங்குமம், மலர்களால் மஞ்சள் நீராட்டு வைபவம் நடந்தது. அப்போது அருவி தடாகத்தில் உள்ள தண்ணீரில் மஞ்சள் கலந்து மஞ்சள் நீராக காட்சியளித்தது. தொடர்ந்து அம்மன் வீதியுலா நடத்தப்பட்டு அலங்கார தீபாராதனைகள் நடந்தது. மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் கட்டளைதாரர்கள் மற்றும் அகஸ்தியர் சத்சன்மார்க்க சபை முத்துக்குமாரசாமி, வக்கீல்கள் சண்முகசுந்தரம், சரவண சேதுராமன், சர்வோதயா கண்ணன், எலக்ட்ரிசியன் சுரேஷ் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அன்புமணி, அறங்காவலர் குழு தலைவர் சக்தி முருகேசன், உதவி ஆணையாளர் ஆறுமுகம், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ஸ்ரீதர், ராமலட்சுமி, சுந்தர்ராஜ், வீரபாண்டியன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை தென்காசி மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி உத்தரவின்படி உதவி வன பாதுகாவலர் நெல்லைநாயகம், தென்காசி வனச்சரக அலுவலர் செல்லத்துரை, குற்றாலம் பிரிவு வனவர் சங்கர்ராஜா, வனவர் மோகன், வனக்காப்பாளர் முத்துசாமி மற்றும் போலீசார் செய்திருந்தனர்.



புதுக்கோட்டை வடசேரிப்பட்டியில் ஜல்லிக்கட்டு;

## 700 காளைகள் சீறிப்பாய்ந்தன: 300 வீரர்கள் மல்லுக்கட்டு

புதுக்கோட்டை, மே.15-

புதுக்கோட்டை சிப்காட் அருகே உள்ள வடசேரிப்பட்டி காளியம்மன் கோயில் திருவிழாவையொட்டி ஜல்லிக்கட்டு போட்டி இன்று நடந்தது. இதற்காக புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சை, கரூர், திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து காளைகள் அழைத்து வரப்பட்டன. காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு மருத்துவ குழுவினர் பரிசோதனை செய்தனர். இறுதியில் 700 காளைகள், 300 வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

காலை 9.30 மணிக்கு ஜல்லிக்கட்டு போட்டியை இலுப்பூர் ஆர்டிஓ அக்பர் அலி கொடியசைத்து துவக்கி வைத்தார். முன்னதாக மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி எடுத்து கொண்டனர். முதலாவதாக வாடிவாசலில் இருந்து கோயில் காளை அவிழ்த்து விடப்பட்டது. இதைதொடர்ந்து ஒவ்வொரு காளையாக அவிழ்த்து விடப்பட்டது. காளைகளை வீரர்கள் போட்டி போட்டு அடக்கினர். களத்தில் வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக பல காளைகள் நின்று விளையாடியது.

காளைகளை அடக்கிய வீரர்கள், பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கு சைக்கிள், பீரோ, கட்டில், மிக்சி, எவர்சில்வர் பாத்திரம் மற்றும் ரொக்கத்தொகை பரிசாக வழங்கப்பட்டது. புதுக்கோட்டை டிஎஸ்பி அப்துல் ரகுமான் தலைமையில் 150 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். ஜல்லிக்கட்டு போட்டியை சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த திரளான மக்கள் கண்டு ரசித்தனர்.

## குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துக்குலுங்கும் வண்ண மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் குதூகலம்

குன்னூர், மே.15-

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பூத்துக்குலுங்கும் வண்ண மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் குதூகலம் அடைந்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற மலை வாசஸ்தலமான சுற்றுலா தலங்களில் ஒன்றாக நீலகிரி மாவட்டம் திகழ்ந்து வருகிறது. இங்கு நிலவும் மிதமான சீதோஷன நிலையை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். குறிப்பாக மே மாத கோடை சீசனில் மட்டும் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை புரிவார்கள். ஊட் டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க பல்வேறு சுற்றுலா தல ங்கள் உள்ளன. இவற்றை சுற்றுலா பயணிகள் பார்த்து ரசித்து செல்கின்றனர்.

இந்நிலையில் இந்தாண்டு கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில், சுற்றுலா பயணிகள் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது. அதற்கு ஏற்றவாறு கோடை விழா நிகழ்ச்சிக்கு தேதிகளும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டு உள்ளன. மே மாதத்தில் நடைபெறும் கோடை சீசனை மகிழ்விக்கும் பொருட்டு மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்கா, காட்டேரி பூங்கா உள்ளிட்ட அனைத்து பூங்காக்களும் தயாராகி வருகின்றன.



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக மே மாதம் 23, 24 மற்றும் 25 ம் தேதிகளில் 65வது பழக்கண்காட்சி நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பூங்கா முழுவதும் சுமார் 2.60 லட்சம் மதிப்பில் பல்வேறு வகை மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர அரிய வகை பச்சை ரோஜா நாற்றுகள் வளர்க்கப்பட்டு பூங்காவின் பல்வேறு இடங்களிலும் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும் சிம்ஸ் பூங்காவில் மாடங்களில் அலங்கரிப்பதற்காக சுமார் 5 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு வகை மலர் நாற்றுகள் நர்சரியில் நடவு செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவை தாயகமாக கொண்டுள்ள பல்வேறு மாநிலத்தில் இருந்து விதைகள் வரவழைக்கப்பட்டு, நடவு செய்யப்பட்ட நாற்றுகளில் தற்போது பல்வேறு வண்ணங்களில் மலர்கள் பூத்து குலுங்குகின்றன. பார்ப்பவர்கள் கண்களுக்கு விருந்து படைக்கும் மலர்கள் பழக்கண்காட்சியன்று பூங்காவில் அலங்கரிக்கப்பட உள்ளதாக தோட்டக் கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது மேரிகோல்ட், பிளாக்ஸ், ஜெனியா, மத்தியோலா ஜகானா, டேலியா, வெர்பனா உட்பட பல்வேறு வண்ண மயமான மலர்கள் பூத்து குலுங்கியதோடு, சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்தாகி வருகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பூக்களின் இடையே அமர்ந்து புகைப்படம் எடுத்து தங்களது மகிழ்ச்சியை வெளிபடுத்தி வருகின்றனர். இதனிடையே நேற்று சிம்ஸ் பூங்காவில் குவிந்த சுற்றுலா பயணிகள் பூக்களை கண்டு மகிழ்ந்தனர். மேலும் நடனமாடி வீடியோ எடுத்தும், புகைப்படங்கள் எடுத்தும் குதூகலம் அடைந்தனர்.

## பிரசித்தி பெற்ற மதுரை சித்திரை திருவிழாவில் பாரம்பரியத்தை காக்கும் தென்னை ஓலை விசிறிகள்; மதுரை புறநகரில் தயாரிப்பு பணிகள் மும்முரம்: ஆன்ட்ராய்டு காலத்திலும் தொடரும் ஆச்சரியம்

மதுரை, மே.15-

அழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்வை காண வந்த பக்தர்களுக்கு நெரிசலால் ஏற்படும் புழுக்கத்தை தணிக்க பாரம்பரியம் மாறாமல் சில பக்தர்கள் தென்னை ஓலை விசிறிகளை வழங்கினர். நவீன உலகிலும் பாரம்பரியத்தை மறக்காமல் பக்தர்கள் செயல்பட்டது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பண்டை காலம் முதல் இன்றைய நவீன காலம் வரை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மக்களின் கீற்று மற்றும் கிடுகு முடைவது, ஓலை பின்னுவம் தொழில் போன்றவை தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழர் நாகரிகத்தில் அனைத்து திருவிழாக்களின்போதும் முடைந்த கீற்றுகளை பயன்படுத்தி பந்தல் அமைப்பது, மேடைகள், கொட்டகைகள், வீட்டின் கூரைகள் அமைப்பது உள்ளிட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் இருந்து வந்துள்ளன.

தமிழக கிராமங்களில் உள்ள வீடுகளில் இன்றும் மின்சாரம் தடைபட்டு வியர்த்து கொட்டினால், தென்னை மற்றும் பனை ஓலைகளால் செய்யப்பட்ட விசிறிகளையே மக்கள் தேடி செல்கின்றனர். அவ்வாறு, மக்களின் வாழ்வியலில் ஒன்றியுள்ள தென்னை ஓலை விசிறிகள், மதுரையின் புகழ்போற்றும் சித்திரை திருவிழாவுக்காக புறநகரில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனுடன் மாவட்டத்தின் மேலூர், உசிலம்பட்டி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் பனை ஓலைகளால் விசிறிகள் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் அழகர் மதுரை வைகையாற்றில் இறங்கும் நிகழ்வின்போது, பக்தர்களுக்கு பலர் தென்னை ஓலை விசிறிகளை வழங்கினர்.

இதுகுறித்து, தென்னை ஓலை விசிறி தயாரிப்பில் ஈடுபடும் மதுரை மேலமாத்தூரைச் சேர்ந்த தம்பதி சின்னகண்ணு (75), மல்லிகா (70) கூறியதாவது: 1980 முதல் 45 ஆண்டுகளாக தொழிலில் ஈடுபட்டு வருகிறோம். எங்கள் கிராமத்தில் உள்ள 50க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆண்டுதோறும் தை முதல் வைகாசி மாதம் வரையிலான ஐந்து மாதங்களுக்கு இதுவே வாழ்வாதாரமாக உள்ளது.



ஒரு நாளைக்கு 25 விசிறிகள் வரையும், கூடுதல் ஆட்களுடன் பணி புரிந்தால் 100 விசிறிகள் வரை உற்பத்தி செய்யலாம். விசிறி செய்வதற்கேற்ப சேதாரம் இல்லாத 2 மீட்டர் அளவுள்ள தென்னை ஓலைகளை மேலமாத்தூர் மட்டுமின்றி சுற்றியுள்ள கிராமங் களிலிருந்து வாங்கி வந்து, அவற்றை ஒரு நாள் முழுக்க தண்ணீரில் ஊற வைத்து வெயிலில் உலர்த்துவோம்.

அதன்பின் ஒவ்வொரு ஓலைகளையும் நான்கு முதல் ஐந்து விசிறிகள் செய்யும் வகையில் வெட்டி எடுத்து, கைகளாலேயே பின்னி விசிறிகள் செய்வோம். விசிறிகள் தயாரானதும் அவற்றின் கைப்பிடிகளில் மரப்பிசிறுகள் இல்லாதவாறு அரிவாளால் வெட்டி சமன்படுத்தப்படும். பின், இறுதியாக 50 விசிறிகள் அடங்கிய கட்டுக்கள் மொத்தமாக விற்பனைக்கு அனுப்பப்படும்.

விலை நிர்ணயம்:

தொடக்கத்தில் ஒரு தென்னை ஓலை ரூ.10 காசுக்கு விற்பனை செய்யப்பட்டபோது விசிறியும் ரூ.15 காசு வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. 2005க்கு பின் ஒரு தென்னை ஓலையின் விலை உயர்ந்து ரூ.2 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், உற்பத்தி செலவும் படிப்படியாக அதிகரித்து தற்போது விசிறியின் விலை தை முதல் பங்குனி வரையிலான மூன்று மாதங்களில் ஒரு விசிறியின் விலை ரூ.2 முதல் 3க்கும், சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் ஒரு விசிறியின் விலை ரூ.4க்கும் கொள்முதல் செய்கிறோம். எங்களிடம் தை முதல் பங்குனி வரை ரூ.200க்கு ஒரு கட்டு விசிறியை வாங்கும் வியாபாரிகள் அதனை ரூ.400 வரையும், சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் ரூ.400க்கு வாங்கி அதனை ரூ.800க்கும் விற்பனை செய்கின்றனர்.

தென்னை ஓலை மட்டுமின்றி கிடுகு, கூரைகள் தயாரிக்கும் பணிகளையும் எங்கள் பகுதி கிராம மக்கள் செய்து வருகின்றனர். ஓராண்டில் ஐந்து மாதங்கள் தவிர்த்து மற்ற மாதங்களில் வேலை இல்லாததால் கூலி வேலை, 100 நாள் வேலை திட்டம் போன்வற்றுக்கு சென்று பிழைத்து வருகிறோம். தென்னை ஓலை விசிறி மற்றும் கிடுகு தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஒருங்கிணைத்து, தமிழக அரசு உதவிகள் செய்ய முன்வந்தால், அடுத்த தலைமுறையினரும் ஆர்வமுடன் பணிபுரிய முன்வருவர். இவ்வாறு கூறினர்.

மாலை தந்தி

வியாழக்கிழமை 15.5.2025



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.77 சுப்பிரமணியபுரம் தெற்கு சண்முகபுரம் பகுதியில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார்கள் அருகில் மதிப்பிற்குரிய மேயர்இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி, மாமன்ற உறுப்பினர் ராஜ் பிரதாபன் ஆகியோர் உடன் உள்ளனர்.




# மதுரை லேடி டோக் பெருமாட்டி கல்லூரியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 'கல்லூரிக் கனவு' விழிப்புணர்வு

மதுரை, மே.15-

மதுரை மாவட்டத்தில் லேடி டோக் பெருமாட்டி கல்லூரியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் நடைபெறும் 'கல்லூரிக் கனவு' மாணாக்கர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள. சங்கீதா குத்துவிளக்கேற்றி வைத்து உரையாடி, கல்லூரி கனவு குறித்த வழிகாட்டுதல் கையேடுகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா, வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் இந்திரா ,திறன் மேம்பாட்டு துறை உதவி இயக்குனர் செந்தில்குமார், நான் முதல்வன் நிகழ்ச்சி மேலாளர் உஷாராணி, மதுரை மாவட்ட கல்வி அலுவலர் அசோக் குமார், தனியார் பள்ளிகள் மாவட்ட கல்வி அலுவலர் சுதாகர், மாநகராட்சி கல்வி அலுவலர் ஜெய்சங்கர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்க உதவி திட்ட அலுவலர் சரவணன் முருகன், லேடி டோக் பெருமாட்டி கல்லூரி முதல்வர் டாக்டர்.பியூலா ஜெயஸ்ரீ, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கல்லூரி முதல்வர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பம்மல் தெற்கு பகுதிகழக திமுக சார்பில் கழக ஆட்சியின் சாதனை விளக்க மற்றும் நலதிட்ட உதவி வழங்கி பொதுகூட்டம்

பம்மல், மே.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் நாகல்கேனி பகுதியில் காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநக ராட்சி பம்மல் தெற்கு பகுதி கழக திமுக சார்பில் கழக ஆட்சியின் சாதனை விளக்க மற்றும் நலதிட்ட உதவி வழங்கி பொதுகூட்டம் பம்மல் மண்டல குழுத் தலைவரும் பம்மல் தெற்கு, பகுதி செயலாளருமான வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. பொதுகூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தலைமை கழக பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி. கலந்து கொண்டு நான்கு வருட. திமுக ஆட்சியின் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினர். இதில் மாமன்ற உறுப்பினர்கள் சத்யா மதியழகன், ரம்யா சத்யபிரபு மற்றும் பம்மல் தெற்கு பகுதிகழக நிர்வாகிகள், மகளிரணியினர் அணி சார்ந்த நிர்வாகிகள். உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிக்கனவு 2025 உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியினை காணொளிக் காட்சியின் மூலம் துவக்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் செய்யதம்மாள் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு கல்லூரிக்கனவு உயர்கல்வி கையேடுகளை வழங்கினார்

# ஸ்ரீ ஜயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் பள்ளிகாரணை வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியில் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள்

பள்ளிகாரணை, மே.15-

செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிகாரணையில் ஸ்ரீ ஜயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் அதன் செயலாளர் திருமதி கோகிலா ராஜேஷ் ஏற்பாட்டில் பள்ளிகாரணை வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியில் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் நடைபெற்றது.




தமிழ்நாட்டின் செங்கல்பட்டு, சென்னை, கார்சிபுரம் , ராணிபேட்டை, வேலூர், திருப்பத்தூர், கோவை, கடலூர் விழுப்புரம், திருநெல்வேலி என அனைத்து மாவட்டங்களில் இருந்து 8 , 10 , 13 , மற்றும் 25 வயதுக்கு உட்பட்டோர் கலந்து கொண்ட இப் போட்டிகளில் சுமார் 600 கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

வயது வாரியாக ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் தனித்தனியாக தலா 6 சுற்றுக்களாக நடைபெற்றன. இதில் முதல் 30 இடங்களை பிடித்து வெற்றி பெற்ற 240 பேர்களுக்கு மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளி முதல்வர் ஜமுனா, துணை முதல்வர் செல்லாம்பிகை, தாம்பரம் மாநகராட்சி 48வது வார்டு கவுன்சிலர் சசிகலா கார்த்திக், தாம்பரம் மாநகராட்சி 64வது வார்டு கவுன்சிலர் ஷகிலா நான்சி , செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி. ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு கோப்பைகளை வழங்கி பாராட்டினர்.

மேலும் இப்போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடிய 8 வயது அனைவருக்கும் சிறப்பு பரிசாக கோப்பைகள் வழங்கபன.

மேலும் இந்த நிகழ்வில் பள்ளி ஊழியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், செங்கப்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்





# பழனி ரெணகாளியம்மன் கோவில் மூன்று நாள் சித்திரை திருவிழா

திண்டுக்கல், மே.15-

திண்டுக்கல் மாவட்டம் பழனி புது தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள பழமை மிக்க ரெண காளியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் சித்திரைத் திருவிழா திருவிழா 3 நாட்கள் நடந்தது முதல் நாள் இரவு அழகாய் ஊற்றில் இருந்து அம்மன் கரகம் அலங்கரித்து கரகாட்டம், வான வேடிக்கையுடன், மேளதாளம் முழங்க அம்மன் கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது. 2வது நாளான காலை நான்கு மணிக்கு மாவிளக்கு, முளைப்பாரி, அக்னிச்சட்டி, பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து பொங்கல் வைத்து கிடா வெட்டி பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். அலகு குத்தி காவடி எடுத்து. தீச்சட்டி எடுத்தல் பக்தர்கள் ஊர்வலமாக வந்தனர். பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது.

3வது நாள் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர் மாலை 4 மணிக்கு மேளதாளம் முழங்க கரகாட்டம் ஆடி பெண்கள் முளைப்பாரி எடுத்தனர். இதைத்தொடர்ந்து மஞ்சள் நீராடி, வான வேடிக்கையுடன். புதிய தாராபுரம் ரோடு வழியாக கவுண்டன்குளம் இந்திரா நகர் ஓம் சண்முகா தியேட்டர் அண்ணா சாலை குபேரபட்டினம் வழியாக வந்து அம்மன் வீதி உலா நடந்தது. வழிநெடுகிலும் குடங்களில் தண்ணீர் ஊற்றி, வாழைப்பழம், தேங்காய், கற்பூரம் ஏற்றி சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். இரவு 7 மணிக்கு அம்மன் பூஞ்சோலை வந்தடைந்தது. இவ்விழாவில் காவல் அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பழனியை சுற்றியுள்ள ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள், பொதுமக்கள் செய்திருந்தனர்.

# மே.16ல் வெளியாகிறது 10, 11ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள்

சென்னை, மே.15-

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற 202425 ம் கல்வி ஆண்டுக்கான 10, 11ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வருகிற 16ம் தேதி (வெள்ளிக்கிழமை) வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள் மே.19ம் தேதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது முன்கூட்டியே மே.16ம் தேதி வெளியிடப்படுகிறது.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் சென்னையில் உள்ள அரசுத் தேர்வுகள் இயக்ககம் அலுவலகத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தேர்வு முடிவுகளை வெளியிடுகிறார்.

மாணவர்கள் தங்கள் தேர்வு முடிவுகளை https://results.digilocker.gov.in, www.tnresults.nic.in ஆகிய இணையதளங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். இந்த இணையதளங்களில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

மேலும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். மேலும், பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள செல்போன் எண்ணுக்கும், தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய செல்போன் எண்ணுக்கும் குறுஞ்செய்தி வழியாகவும் தேர்வு முடிவுகள் அனுப்பப்படும்.



ஜி.எம்.செஸ் அகாடமி மற்றும் தனலட்சுமி பொறியியல் கல்லூரி சார்பில்

# முதலாவது மாநில அளவிலான சதுரங்கப் போட்டி, தாம்பரம் அடுத்த மணிமங்கலத்தில் உள்ள கல்லூரி வளாகத்தில் நடந்தது

மணிமங்கலம், மே.15-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றிய மணிமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட தனலட்சுமி பொறியியல் கல்லூரி சார்பில் முதலாவது மாநில அளவிலான சதுரங்கப் போட்டி, இதில் 8 10 13 மற்றும் 25 வயது பிரிவில் இருபாலருக்கும், சுவிஸ் அடிப்படையில் பிடே விதிப்படி போட்டிகள் நடத்தப்பட்டன.

500 சிறுவர் சிறுமியர் பங்கேற்றனர் இதில் எட்டு வயது சிறியவர் பிரிவில் செங்கல்பட்டு சேர்ந்த வியன், சிறுமியரில் செங்கல் பட்டு ராகவி முதலிடங்களை பிடித்தனர்.

அதேபோல் 10 வயது சிறுமியர் பிரிவில் சென்னை அக்ஷரா, சிறுவவரில் சென்னை லார்ஷன், 13 வயதில் சிவகங்கை நிதின் ராமசாமி காஞ்சிபுரம் அமுதினி ஆகியோர் முதலிடங்களை வென்றனர் தொடர்ந்து 23வது பிரிவில் பெண்களில் சென்னை ஐஸ்வர்யா ஆண்களில் நெல்லை மணிகண்ட பிரபு ஆகியோர் முதலிடத்தை கைப்பற்றினர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தனலட்சுமி கல்லூரி தலைவர் ராமமூர்த்தி, செங்கல்பட்டு சதுரங்க சங்க செயலாளர் கிருஷ்ண மூர்த்தி, ஜி.எம்.செஸ் அகாடமி செயலாளர் மாசிலாமணி ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

# கொடைக்கானலில் மே.16 முதல் 19 வரை 'பாராசூட்' சாகச நிகழ்ச்சி: சுற்றுலா துறை ஆய்வு

திண்டுக்கல், மே.15-

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க பாராசூட் சாகச நிகழ்ச்சி மே 16 முதல் 19ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்நிலையில், சுற்றுலா பயணிகளை எவ்வளவு தூரம் பறக்க வைக்கலாம் என பாராசூட்டில் பறந்து சுற்றுலாத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.





திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் 'மலைகளின் இளவரசி' என அழைக்கப்படுகிறது. இங்கு இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகள் அதிகமாக உள்ளன. கொடைக்கானலில் தோட்டக்கலைத் துறை மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து விரைவில் கோடை விழா மற்றும் 62 வது மலர் கண்காட்சி நடத்த உள்ளது.

கோடை காலத்தை முன்னிட்டு குளிர் சீசனை அனுபவிக்க கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவு வந்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க தற்போது தனியார் நிறுவனத்துடன் இணைந்து தமிழக சுற்றுலாத் துறை பாராசூட் நிகழ்ச்சியை மே 16 முதல் 19ம் தேதி வரை, கொடைக்கானல் மூஞ்சிக்கல்லில் நடத்த உள்ளது. சுற்றுலாத் துறை ஆய்வு: காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுற்றுலாப் பயணிகள் பாராசூட் சாகச பயணத்தை மேற்கொள்ளலாம். வானில் ஒரு ரவுண்ட் வர ரூ.200 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதில், 15 முதல் 60 வயது வரையுள்ள இரு பாலரும் பங்கேற்கலாம். வானில் பறந்தவாறு கொடைக்கானலின் இயற்கை அழகை ரசிக்கலாம். காற்றின் திசை, சுற்றுலாப் பயணிகளை எவ்வளவு தூரம் பறக்க வைக்கலாம் என பாராசூட்டில் பறந்து ஆய்வு செய்து வருவதாக சுற்றுலாத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




■ மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் 1434ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மே மாதம் 14 ஆம் தேதி தொடங்கி 28 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அதன் தொடக்கமாக திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியர் ஜீவ ஜோதி தலைமையில் வட்டாட்சியர் கவிதா மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் இணைந்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161